# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1809/4 - 2013 මැයි මස 06 වැනි සඳුදා - 2013.05.06

*1809/4 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 11/80.*

### *1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்*

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிரிசேன,
சுகாதார அமைச்சர்.

கொழும்பு,
2013, ஏப்பிறல் 19.

ஒழுங்குவிதிகள்

இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு செத்தெம்பர் 1 ஆந் திகதிய 1617/16 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2009 ஆம் ஆண்டின் உணவு (ஒக்சிடன்ட் எதிரிகள்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் 4 ஆம் ஒழுங்குவிதிக்கான காப்புவாசகத்தில் "குழந்தைகள் மற்றும் இளம்பிள்ளைகளுக்காக முன்னப்படுகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக "குழந்தைகள் அல்லது இளம் பிள்ளைகளுக்கான" ; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :-

(2) அதன் 9 ஆம் ஒழுங்குவிதியில் –

(அ) "ஒட்சிடன்ட் எதிரி" என்னும் சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினை இடுவதன் மூலமும் :-

"ஒக்சிடன்ட் எதிரி" என்பது "சேர்மவுயிரகவாக்கத்தினால் விளைவிக்கப்பட்ட பழுதடைவிற்கு எதிராக அதனைப் பாதுகாப்பதன் மூலம் உணவுகளின் பயன்நுகர் காலத்தை நீடிக்கின்ற உணவுச் சேர்ப்பு ஒன்று;" எனப் பொருள்படும்.

(ஆ) "குழந்தைகள்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன் மூலமும் :-

"குழந்தைகள் அல்லது இளம்பிள்ளைகளுக்கான உணவுகள்" என்பது "குழந்தைகள் அல்லது இளம்பிள்ளைகளுக்காக விசேடமாக தயாரிக்கப்படுகின்றதான, உற்பத்தி செய்யப்படுகின்றதான அல்லது சந்தைப்படுத்தப்படுகின்றதான உணவுகள்; " எனப் பொருள்படும்.

(இ) "இளம்பிள்ளைகள்" என்னும் சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

"இளம்பிள்ளைகள்" என்பது பன்னிரெண்டு மாதங்களிற்கும் முப்பத்தாறு மாதங்களிற்கும் இடையேயான வயதினையுடைய பிள்ளைகள் எனப் பொருள்படும்.

5 - 513




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.